இணைப்பு.

[105-ம் பக்கத்திலுள்ள 18-ம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவுக்கான விடையைக் காண்க]

Sheep Farm, Chinnasalem.

The object of the farm is to evolve a suitable breed for the area by cross-breeding to upgrade the local Tiruchirappalli black woolly sheep.

The farm is located in an area of 1,866.50 acres. There is a cattle section and a Poultry Section in the farm. The present stock of livestock are as follows—

Cattle—308 (Breeds maintained—Alambadi and Hallikar.)

Sheep—1,200 (Mandya, Mecheri and Tiruchirappalli Black and Cross breeds).

Poultry—6,203—White Leghorn.

Sheep Farm, Sathur.

The object of the farm is to supply good pedigree males to the breeders by pure breeding of Kilakarisal sheep. The farm is located in an area of 542.08 acres of land. In addition to sheep, there is a poultry section in the farm.

The present stock of sheep is 1,336 (Ramanathapuram White and Kilakarisal).

Sheep section in District Livestock Farm, Hosur.

The object of the farm is to supply good pedigree males to the breeders. The entire area of the farm is 1,646.41 acres. The stock of sheep is 958 and the breeds maintained are Mecheri, Mandya and Cross Breed sheep.

Sheep section, District Livestock Farm, Pudukottai.

The object of the farm is to supply good pedigree males to the breeders.. Cross breeding of Mandya and Kilakarisal is also undertaken. The area of the entire District Livestock Farm is 997.04 acres. The stock of sheep is 1,130 and the breeds maintained are Kilakarisal, Mandya and Cross Breeds.

Sheep Section, District Livestock Farm, Abishekapatti.

The object of the farm is to supply good pedigree males to the breeders.

The area of the entire District Livestock Farm is 1,898.71 acres.

The stock of sheep maintained is 1,604 and the breed is Kilakarisal.

Sheep Section in the District Livestock Farm, Chettinad.

The object of the farm is to supply good pedigree males to the breeders

The area of the entire District Livestock Farm is 1,907.32 acres.

The stock of sheep maintained is 595 and the breed maintained is Kilakarisal.

Sheep Farm, Kattupakkam.

The farm is located at Kattupakkam in Chingleput District, 40 km. away from Madras. This farm was started on 15th July 1957 in an extent of 576.17 acres, with the object of developing pedigree rams and producing superior cross-breeding varieties. research studies on exploring the maximum potentialities of pure Mandya and Madras Red Breeds of sheep are being conducted in this farm. Research is also being undertaken to study the advantages of feeding the sheep with concentrates along with grazing. This farm has at present 777 sheep. Apart from this, buffaloes, Sindhi cows and White Yorkshire pigs are also maintained in this farm.

Sheep Breeding Research Station, Sandynallah, Nilgiris district.

This farm has a strength of 1,686 sheep consisting of Nilgiris Marino, Romney March, Marino-Nilgiri Crosses and Romney—March. Crosses. Research Programmes are undertaken in this station with the object of improving the Nilgiris sheep by selective breeding in order to improve the yield of wool and the quality of wool. Research studies are also undertaken at present, to find out the possibility of getting more wool and mutton through cross-breeding of exotic varieties like Marino with Nilgiri variety of sheep. It has been proposed to increase the strength of sheep to 5,000 in due course in order to distribute exotic breed sheep to the breeders and to increase wool and mutton production and to make sheep breeding a subsidiary agricultural occupation in Tamil Nadu.

ஆட்டுப் பண்ணை, சின்னசேலம்.

கலப்பினப் பெருக்கின் மூலம் நல்லதொரு சாதி ஆட்டினத்தை உருவாக்கி தற்பொழுது திருச்சி கருப்பு இன ஆடுகள் எனப்படும் உள்ளூர் ஆடுகளை தரம் உயர்த்துதலே இப்பண்ணையின் நோக்கமாகும்.

இப் பண்ணை 1,866.60 எக்கர் நிலத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இப் பண்ணையில் ஆடுகளுடன் மாட்டுப் பிரிவும், கோழிப் பிரிவும் உள்ளன. இப்போதைய ஆடு, கோழி முதலியனவற்றின் இருப்பு விபரம் வருமாறு:

இனம்.

மாடுகள்: 308 (ஆலம்பாடி, ஹல்லிகார்).

ஆடுகள் 1,200 (மாண்டியா, மேச்சேரி, திருச்சி பிளாக், கலப்பினங்கள்).

கோழி 6,203 (வெள்ளை போந்கா).

ஆட்டுப் பண்ணை, சாத்தூர்.

கீழக்கரிசல் ஆடுகளை தனியாக வளர்த்து நல்ல பொலி கிடாய்களை ஆடு வளர்ப்பவர்களுக்குக் கொடுப்பதே இப் பண்ணையின் நோக்கமாகும்.

1971 அக்டோபர் 22]

இப்பண்ணை 542.08 ஏக்கர் நிலத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

ஆடுகளுடன் கோழிப் பிரிவு ஒன்றும் இப் பண்ணையில் உள்ளது.

தற்போதைய ஆடுகளின் எண்ணிக்கை 1,336 (இராமநாதபுரம் வெள்ளை மற்றும் கீழக்கரிசல் ஆடுகள்).

மாவட்ட கால்நடைப் பண்ணை, ஒசூரிலுள்ள ஆடுகள் பிரிவு.

ஆடு வளர்ப்பவர்களுக்குப் பொலி கிடாய்கள் வழங்குவதே இப்பண்ணையின் நோக்கமாகும்.

இப்பண்ணை முழுவதும் 1,646.41 ஏக்கர் நிலத்தில் அமைக்கப் பட்டுள்ளது.

இப்பண்ணையில் வளர்க்கப்பட்டுவரும் ஆடுகளின் எண்ணிக்கை 958 (மாண்டியா, மேச்சேரி, கலப்பினங்கள்).

மாவட்ட கால்நடைப் பண்ணை, புதுக்கோட்டையிலுள்ள ஆடுகள் பிரிவு.

ஆடு வளர்ப்பாளர்களுக்கு நல்ல பொலிகிடாய்கள் வழங்குவதே இப்பண்ணையின் நோக்கமாகும்.

இப்பண்ணை முழுதும் 997.04 ஏக்கர் நிலத்தில் உள்ளது.

இப்பண்ணையிலுள்ள ஆடுகளின் எண்ணிக்கை 1,130 ஆகும். (கீழக்கரிசல், மாண்டியா, கலப்பினங்கள்).

அபிஷேகப்பட்டி மாவட்ட கால்நடைப் பண்ணையிலுள்ள ஆடுகள் பிரிவு.

நல்ல பொலிகிடாய்களை ஆடு வளர்ப்பாளர்களுக்கு வழங்குவதே இப்பண்ணையின் நோக்கமாகும்.

இப் பண்ணை முழுதும் 1,898.71 ஏக்கர் நிலத்தில் அமைக்கப் பட்டுள்ளது.

இப் பண்ணையில் 1,604 கிழக்கரிகல் ஆடுகள் உள்ளன.

செட்டிநாடு, மாவட்ட கால்நடைப் பண்ணையிலுள்ள ஆடுகள் பிரிவு.

நல்ல பொலி கிடாய்களை வழங்குவதே இப் பண்ணையின் நோக்க மாகும்.

இப்பண்ணை முழுவதும் 1,907.32 ஏக்கர் நிலத்தில் அமைக்கப டுள்ளது.

இப் பண்ணையில் 595 கிழக்கரிகல் ஆடுகள் உள்ளன.

ஆட்டுப் பண்ணை, காட்டுப்பாக்கம்.

இப்பண்ணை செங்கை மாவட்டத்தில் காட்டுப்பாக்கம் கிராமத்தில் சென்னையிலிருந்து 40 கிலோ மீட்டர் அருகாமையில் தெற்கு நோக்கியுள்ளது.

[1971 அக்டோபர் 22

இப் பண்ணை 15—7—1957-ல் 576.17 ஏக்கர் பரப்பளவில் தொடங்கப்பட்டது. பொலி கிடாக்கள் உற்பத்தி செய்வதற்காகவும், கலப்பின ஆடுகள் உற்பத்தி செய்வதற்காகவும் இப் பண்ணை தொடங்கப்பட்டது.

கால்நடைக் கல்வி மற்றும் ஆராய்ச்சிப் பகுதிக்கு 1—12—1969-ல் மாற்றப்பட்ட பிறகு அசல் மாண்டியா கீழ்கருசை இன ஆடுகள் விருத்தி செய்வதற்கான ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. மற்றும் இந்த இன ஆடுகளில் உயர்ந்தபட்ச தன்மைகளை அறிவதற்காகவும், மேய்ச்சலுடன் தீவனம் ஆடுகளுக்குக் கொடுப்பது உகந்ததா என்பதையும் அறிவதற்கான ஆராய்ச்சிகளும் நடத்தப்பட்டு வருகின்றன. தற்சமயம் பண்ணையில் 777 (எழுநூற்று எழுபத்தேழு) ஆடுகள் உள்ளன.

இந் நிலையத்தில் எருமை, சிந்தி மாடுகளும், வெள்ளைப் பன்றிகளும் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

ஆடு வளர்ப்பு ஆராய்ச்சிப் பண்ணை, சாண்டிநல்லா, நீலகிரி மாவட்டம்.

இப்பண்ணையில் நீலகிரி இனம், மெரினோ இனம், ராம்னிமார்ஷ் இனம் மேற்கண்டவைகளின் கலப்பு இனங்கள் உட்பட 1,686 ஆடுகள் உள்ளன.

முதலில் நீலகிரி இன ஆடுகளை தீவிர தேர்வு முறையில் (Selective breeding) அபிவிருத்தி செய்து இவ்வினத்தின் கம்பள உற்பத்தி அளவையும் மென்மையையும் அதிகரிக்கும் முறையில் ஆராய்ச்சிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும் வெளிநாட்டு இனங்களான மெரினோ போன்ற இனங்களை நீலகிரி ஆட்டு இனங்களுடன் கலப்பினம் செய்து (Cross breeding) அதிக அளவு கம்பளமும் இறைச்சியும் ஈனும் முறையில் கலப்பினங்களை தோற்றுவிக்கும் ஆராய்ச்சிகள் தற்பொழுது நடத்தப்பட்டு வருகின்றன.

எதிர்காலத்தில் இவ்வாராய்ச்சி பண்ணை ஆடுகளின் அடிப்படை எண்ணிக்கையை 5,000 ஆக உயர்த்தவும், ஆடு வளர்ப்போர்க்கு கிடா மற்றும் உயர்ரக ஆடுகளை சிறந்த முறையில் வழங்கவும், ஆடு பராமரிப்பை விவசாயத்தின் ஒரு உபதொழிலாக்கி ஆட்டு இறைச்சி உற்பத்தியையும், கம்பள உற்பத்தியையும் தமிழ்நாட்டில் அதிகப்படுத்த வேண்டிய செயல்முறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.